**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**அசல் வழக்கு எண்.100/2022**
**நாள் 15/10/2024, செவ்வாய்க்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பின் 1-வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10-வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் - கணேசன் | த/பெயர் - அருணாச்சலம் |
| வயது - 57 | தொழில் - |
| விலாசம் - எண் 2/32, வடக்கு தெரு, சின்னம்பேடு கிராமம், பொன்னேரி வட்டம், திருவள்ளூர் மாவட்டம். | |

**முதல் விசாரணை தொடர்ச்சி (PW1)**

நான் இந்த வழக்கின் வாதியாவேன். நான் இந்த வழக்கை பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன். வழக்கின் விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். எனது வழக்கிற்கு ஆதரவாக என்னுடைய நிரூபணவாக்குமூலத்தை ஏற்க்கெனவே தாக்கல் செய்துவிட்டேன். என் தரப்பு சான்றாவணமாக மேலும், வா.த.சா ஆ 7 முதல் வா.த.சா ஆ 10 வரை குறியீடு செய்யவேண்டுகிறேன். தாவா படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(7). அருணாச்சலம் என்பவரின் இறப்பு சான்றிதழ் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட ஒளி நகல் **வா.த.சா ஆ 7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அசல் திருப்பப்பட்டது.

(8). கணேசன் என்பவரின் ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட ஒளி நகல் **வா.த.சா ஆ 8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அசல் திருப்பப்பட்டது.

(9). 29.01.2022 தேதியிட்ட வாதி கொடுத்த பதில் அறிவிப்பு அலுவலக நகல் **வா.த.சா ஆ 9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(10). 28.01.2022 தேதியிட்ட வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் **வா.த.சா ஆ 10** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**(குறுக்கு விசாரணைக்காக வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப் பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பொன்னேரி.**